


**04. 07. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை எட்ட கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பங்காற்றுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் சேலம் ரயில்வே கோட்ட ரயில் நிலையங்களின் வளர்ச்சிப் பணிகளை விரைவாக முடிக்குமாறு மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உத்தரவிட்டுள்ளார்.

3. அத்திக்கடவு அவினாசி திட்ட இரண்டாம் கட்ட பணிகள் உரிய ஆய்விற்கு பின்னர், நடைமுறைப் படுத்தப்படும் என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. K. A. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

4. பொங்கல் பண்டிகைக்கான இலவச வேட்டி சேலைகள் தகுதியுடைய அனைவருக்கும் கிடைப்பது உறுதிசெய்யப்படும் என்று மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி கூறியுள்ளார்.

5. இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது 20-20 கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

சி. பி. ராதா கிருஷ்ணன்

வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை அடைய கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பங்காற்றுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கூட்டுறவு தினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில், விவசாயிகள், மகளிர் தொழில் முனைவோரின் ஆளுமையை மேம்படுத்தி ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான வலுவான சமூகத்தை உருவாக்குவதில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு அளப்பறியது என்றார்.

மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்ட செய்தியில் பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையில் நாட்டின் கூட்டுறவுத்துறை புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

கூட்டுறவு பல்கலைக்கழகம், நவீன பயிற்சி மையங்கள் உள்ளிட்டவற்றால் விவசாயிகள், பெண்கள், சிறுதொழில் முனைவோர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் விமான நிலையத்தில் 480 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய முனைய கட்டடத்தை இன்று திறந்து வைத்தார்.

இந்த விரிவாக்கத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 20 லட்சம் விமானப் பயணிகள் மேம்பட்ட சேவைகளை பெறுவர்.

தொடர்ந்து ஒருலட்சத்து 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டப் பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டியுள்ளார்.

இந்நிகழ்வில் பல்வேறு துறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 54 ஆயிரம் இளையோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசிய பிரதமர், சிறிய நகரங்கள் முதல் எல்லைப்பகுதிகள் வரை அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி நடவடிக்கைகள் விரைவுப்படுத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான செமி கண்டெக்டர் ஆலையை இன்று திறந்து வைக்கிறார்.

இதனிடையே பிரதமர் நாளைமறுநாள் 6 நாள் அரசு முறை பயணமாக இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு புறப்படுகிறார்.

40 ஆண்டுகளுக்கு நியூசிலாந்து செல்லும் முதல் இந்திய பிரதமர் திரு. நரேந்திரமோடி ஆவார்.

இப்பயணத்தின் போது அந்தந்த பகுதிகளில் உள்ள இந்திய வம்சாவளியினரை அவர் சந்தித்து பேசுகிறார்.

❖❖❖❖❖❖

<u>விவேகானந்தர் நினைவு தினம்</u>

இந்திய கலாச்சாரம், ஆன்மீகம், இறையாண்மைக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைக்க சுவாமி விவேகானந்தரின் சேவை அளப்பறியது என பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் 124-வது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி அவர் வெளியிட் செய்தியில் வளர்ச்சியடைந்த இந்தியா இலக்கை எட்ட அவரது மேம்பட்ட சிந்தனைகள், புதிய உத்வேகத்தை அளிக்கும் என்றார்.

❖❖❖❖❖❖

<u>அஷ்விணி வைஷ்ணவ்</u>

மும்பை அஹமதாபாத் இடையிலான அதிவேக ரயில் வெளிப்பாதை இன்னும் 3 ஆண்டுகளில் நிறைவடையும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இப்பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் இப்பகுதிகளுக்கு இடையிலான அதிவேக புல்லட் ரயில் திட்டம் விரைந்து முன்னேறி வருவதாக கூறினார்.

குஜராத் பகுதியில் உள்ள 80 சதவிகித பணிகள் நிறைவடைந்து இருப்பதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

<u>எல்.முருகன்</u>

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் சேலம் ரயில்வே கோட்ட ரயில் நிலையங்களின் வளர்ச்சிப் பணிகளை விரைவாக முடிக்குமாறு மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உத்தரவிட்டுள்ளார்.

சேலம் சந்திப்பு ரயில் நிலையத்தில் இன்று இப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட அவர், பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி புதிய அம்ரித் பாரத் திட்ட ரயில் நிலையங்களை விரைவில் தொடங்கி வைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

<u>வெங்காயம்</u>

வெங்காயத்திற்கான கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இதன்படி குவிண்டால் ஒன்று ஆயிரத்து 875 ரூபாயாக இருந்த கொள்முதல் விலை 2 ஆயிரத்து 125 ரூபாயாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

உயர்த்தப்பட்ட கொள்முதல் விலை உடனடியாக இன்றுமுதல் உடனடியாக அமலுக்கு வந்துள்ளதாக மத்திய நுகர்வோர் உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

செங்கோட்டையன்

அத்திக்கடவு அவினாசி திட்ட இரண்டாம் கட்ட பணிகள் உரிய ஆய்விற்கு பின்னர், நடைமுறைப் படுத்தப்படும் என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் பட்டா மாறுதலை எளிமையாக்கும் புதிய செயலி நடைமுறைக்கு வரும் போது மக்களின் போக்குவரத்து சிரமங்கள் குறையும் என்றார்.

40 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கும் அரசின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் நத்தம் புறம்போக்கு மற்றும் இதர இடங்களில் குடியிருப்பவர்கள் பற்றிய ஆய்வுப்பணிகள் தொடங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக கோபிச்செட்டிப்பாளையம் பாரியூர் கொண்டத்து காளியம்மன் திருக்கோவில் உட்பட நலிவடைந்த 100 திருக்கோவில்களுக்கு பூஜைப் பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்டங்களை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖

விஜய் பாலாஜி

தமிழகத்தில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

காட்பாடியில் வேலூர் கோட்டையில் இரண்டரை கோடி ரூபாய் மதிப்பில் நவீன காட்சி அமைப்புகளுடன் விரிவுப்படுத்தப்பட்ட அருங்காட்சியகத்தை இன்று திறந்து வைத்து பேசியஅவர், பொங்கல் பண்டிகைக்கான இலவச வேட்டி சேலைகள் தகுதியுடைய அனைவருக்கும் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றார்.

வேலூர் மாவட்டத்தில் முடிவு பெறாமல் உள்ள சாலைப்பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு

ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்றும அமைச்சர் கூறினார்.

இதனிடையே விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லி புத்தூர் அதன் சுற்றுவாட்டாரப் பகுதிகளில் கூலி உயர்வு மற்றும் முறையான நூல் வழங்கிட வலியுறுத்தி கைத்தறி நெசவாளர் இன்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

❖❖❖❖❖❖

<u>வினோத் - வாய்ஸ்</u>

தமிழகத்தில் குறுவை சிறப்புத் தொகுப்பு திட்ட பலன்களை விவசாயிகளுக்கு வழங்காத துறை அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில வேளாண் துறை அமைச்சர் திரு.வினோத் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்டக்குடி, திருவைகாவூர், தேவன்குடி உள்ளிட்ட பகுதிகளில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் வழங்கப்படவில்லை என புகார்கள் வந்துள்ள நிலையில் இதுகுறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்றார்.

விவசாயிகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

... வாய்ஸ் ...

❖❖❖❖❖❖

<u>ரமேஷ்</u>

இந்து சமய அறநிலையத்துறையின் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் இத்துறைக்கான அமைச்சர் திரு. ரமேஷ் தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் டாக்டர். டி. ஜி. வினய் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில் கோவில்களில் செயல்படுத்தப்படும் திருப்பணிகள், பக்தர்களின் அடிப்படை வசதிகள், நிதிநிலை அறிக்கையில் இடம் பெறும் புதிய

அறிவிப்புகள் உள்ளிட்ட பல்வேறு விசயங்கள் குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

❖❖❖❖❖❖

<u>தகுதித்தேர்வு</u>

தமிழ்நாட்டில், பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான தகுதித்தேர்வு இன்றும், நாளையும் நடைபெறுகிறது.

60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இத்தேர்வை எழுதுகின்றனர்.

சென்னை அம்பத்தூர் S.R.M. மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில் மாநில பள்ளிக்கல்வித்துறை கூடுதல் தலைமை செயலர் திரு. சந்திரமோகன் இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

திருப்பூரில் ஆயிரத்து 439 தேர்வர்களுக்கான 5 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖

<u>அமோனியா</u>

திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைபேரியில் தனியார் கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையிலிருந்து பாதுகாப்பாக அமோனியா வாயு அகற்றும் பணிகள் இன்று நடைபெற்று வருகிறது.

கடந்த 21-ம் தேதி நேரிட்ட வாயு கசிவு விபத்தில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்த நிலையில், ஆலையின் சேமிப்பு கிடங்கிலிருந்து 2 ஆயிரம் லிட்டர் அமோனியாவை அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

<u>நெல்லை</u>

நெல்லை 5 -வது பட்டாலியனிலிருந்து 44 தேசிய மாணவர் படை மாணவர்கள் இந்திய ராணுவத்தில் பணிபுரிய தேர்வாகியுள்ள நி;லையில் இந்த

சாதனையை பாராட்டி 5-வது பட்டாலியன் தலைமை கமாண்டிங் அதிகாரி லெப்டினன்ட் கர்னல் கார்த்திகேஸ்-க்கு உலக சாதனை விருது இன்று வழங்கப்பட்டது.

ராணுவ பணிக்கு தேர்வாகியுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக தேசிய மாணவர் படை மாணவர்கள் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

இருவரி

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வைப்பாற்றில் முட்செடிகளை அகற்றி மரங்களை நடும் நிகழ்வை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுகபுத்தரா இன்று தொடங்கிவைத்தார்.

நிலத்தடி நீர் ஆதாரத்தை மேம்படுத்தி மாவட்டத்தின் பாரம்பரிய அடையாளமாக விளங்கும் வைப்பாற்றின் இரு கரைகளிலும் செழுமை மிகு மரங்களை நட்டு பராமரிக்கும் வகையில் இந்நடவடிக்கை.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வகை பள்ளிகளிலும் பள்ளி வேலை நேரத்தில் எவ்வித பொது, அரசியல் மற்றும் கூட்ட நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்கேற்க அனுமதிக்கக் கூடாது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சினேகா உத்தரவிட்டுள்ளார்.

இதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖

ராணிப்பேட்டை மாவட்டத்தில் கரீப் பயிர் காப்பீடு செய்வது தொடர்பான கண்காணிப்பு குழு கூட்டம் ஆட்சித்தலைவர் திருமதி. பிரியா ரவிச்சந்திரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

நெல், நிலக்கடலை, உளுந்து, பச்சைபயிறு, துவரை, வாழை, மஞ்சள் பயிர்களுக்கு பிரதமரின் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் உயர்கல்வி மாணாக்கர் சேர்க்கைக்கான சிறப்பு குறைதீர் முகாம் வரும் திங்கட்கிழமை நடைபெறுகிறது.

100 சதவிகித உயர்கல்வியை உறுதி செய்வதுடன் சமூக பொருளாதார காரணங்களால் கல்வியை தொடர முடியாதவர்களுக்கு உரிய வழிகாட்டுதலை வழங்க இதில் வகை செய்யப்படும் என ஆட்சித்தலைவர் திரு. ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினருக்கான கடனுதவிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. துர்கா மூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது 20-20 கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖